<u>பிரசார் பாரதி</u>

<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>

13 10 2026 12 40

செவ்வாய்க்கிழமை நண்பகல்


ஆகாஷ்வாணி

(Tune)

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசின் டிஜிட்டல் நடவடிக்கைகள் காரணமாக, ஊழல் முறைகேடுகள் பெருமளவு குறைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் இணையக் குற்றங்களை எதிர்த்து போராட BIMSTEC நாடுகள் உறுதிப்பூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர்

திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

3. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 2026-2027 ஆம் ஆண்டின் 7 சதவீத அளவிற்கு உயரும் என சர்வதேச செலாவணி நிதியம் தெரிவித்துள்ளது.

4. நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில், வெளிநாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மலையேற்ற வீரர்கள் சிக்கியுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

5 . சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் திக் விஜய் பிரதாப் சிங், கார்த்திக் பிரணவ், அர்ஜுன் ரதி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><>

மத்திய அரசின் டிஜிட்டல் நடவடிக்கைகள் காரணமாக ஊழல் முறைகேடுகள் பெருமளவு குறைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பொருளாதார மாநாட்டில் பேசிய அவர், நேரடி பணப்பரிமாற்றம் மூலம், அரசின் நலத்திட்ட உதவிகள் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுவதை சுட்டிக்காட்டினார்.

இதன் வாயிலாக, மக்களின் வசதிகள் மேம்பட்டு இருப்பதுடன், அரசுக்கும், மக்களுக்கும் இடையே நேரடி இணைப்பை ஏற்படுத்தி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டிஜிட்டல் அதிகாரமளித்தல், நாட்டின் மாற்றத்திற்கு வழிவகுத்திருப்பதுடன், ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கி இருப்பதாகவும் அவர் கூறினார்.

நவீன தொழில்நுட்பங்கள், தரவு பகுப்பாய்வு, அறிவாற்றல் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகள் 21-ஆம் நூற்றாண்டில் முக்கிய இடம்பெறும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மத்திய அரசு அளித்துவரும் ஆதரவு காரணமாக புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை, இரண்டரை லட்சத்தை கடந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டதையும் அவர் நினைவுகூர்ந்தார்.

சமீபத்தில் புதுதில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில், இந்த தொழில்நுட்பம் மூலம் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஜனநாயகத்தின் தாயகமாக இந்தியா திகழ்கிறது என்று கூறிய பிரதமர், நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் பயன்பாட்டில் இருப்பதோடு, சுமார் 80 ஆயிரம் பத்திரிகைகள், ஆயிரம் தொலைக்காட்சி அலைவரிசைகள் மட்டுமின்றி, யூ-டியூப் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூகவலைதளங்களை 500 மில்லியனுக்கும்

அதிகமானோர் பயன்படுத்தி வருவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<><><><><><><>

தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் இணையக் குற்றங்களை எதிர்த்து போராட BIMSTEC நாடுகள் உறுதிப்பூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று வங்கக்கடல் பகுதியில் உள்ள தெற்காசிய நாடுகளின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான BIMSTEC கூட்டமைப்பு நாடுகளின் உள்துறை அமைச்சக மாநாட்டில் பேசிய அவர், இதனை தெரிவித்துள்ளார்.

ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு வாயிலாக இந்த மண்டலத்தை பாதுகாப்பான பகுதியாக மாற்ற உதவிப்பூண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை, நேபாளம், பூடான், தாய்லாந்து, மியான்மர், பங்களாதேஷ் நாடுகளின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

<><><><><><><>

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 2026-2027 ஆம் ஆண்டின் 7 சதவீத அளவிற்கு உயரும் என சர்வதேச செலாவணி நிதியம் தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் பொருளாதார சூழல் குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், உள்நாட்டு தேவை அதிகரிப்பு மற்றும் சீர்திருத்தங்கள் காரணமாக, இந்தியாவின் வளர்ச்சி அதிகரிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ரிசர்வ் வங்கியின் சமீபத்திய நடவடிக்கைகள் இந்த வளர்ச்சிக்கு பெரிதும் உதவிக்கரமாக இருக்கக்கூடும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

<><><><><><><>

தீவிரவாத தாக்குதல்களை மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐ.நா. சபையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பேசிய இந்திய பிரதிநிதி திருமதி. ஆர். மைதிலி, திட்டமிட்ட குற்றங்களை தடுப்பது மற்றும் தண்டனை விதிப்பதற்கான உத்தேச சர்வதேச உடன்படிக்கையில் இதற்கான அம்சத்தை இடம்பெறச் செய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இத்தகைய நடவடிக்கை ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக அமைந்துவிடக்கூடாது என்றும், அவர் வலியுறுத்தினார்.

மக்களை பாதுகாக்கும் பொறுப்பு அந்தந்த நாடுகளை சார்ந்தது என்று குறிப்பிட்ட திருமதி. மைதிலி, குற்றம் சாட்டப்பட்டவர்களின் உரிமைகளை நிலைநாட்டும் அதேவேளையில், பாதிக்கப்பட்டவர்களின் நலனை பாதுகாப்பது அவசியம் என்றும் தெரிவித்தார்.

<><><><><><><>

“மக்கள் நலனே தேசத்தின் நலன்” என்பதை, தாரக மந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இது தொடர்பான சிறப்புத் தொகுப்பில் இன்று, வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி குறித்த பார்வை இடம்பெறுகிறது.

*(வாய்ஸ் ஓவர் - Voice Over - 100 Sec.)*

*“கிழக்கு நோக்கிய பார்வை” என்ற கொள்கையை மத்திய அரசு கடந்த 2014 ஆம் ஆண்டு செயல்படுத்த தொடங்கியதில் இருந்து வடகிழக்கு மாநிலங்கள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன.*

இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப்பணிகள் காரணமாக வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாத சம்பவங்கள் சுமார் 70 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

Bodo, ULFA, Karbi உள்ளிட்ட அமைப்புகளுடன் மத்திய அரசு மேற்கொண்ட 12-க்கும் மேற்பட்ட அமைதி உடன்படிக்கைகள் காரணமாக, இம்மாநிலங்களில் பாதுகாப்புச் சூழல் பெருமளவு மேம்பட்டு இருப்பதுடன், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் சரணடைந்துள்ளனர்.

இதையடுத்து பல்வேறு பகுதிகளில், ஆயுதப்படைகள் சிறப்பு அதிகார சட்டம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, வடகிழக்கு மாநிலங்களில் அமைதியான சூழல் நிலவுவதை தொடர்ந்து, மத்திய அரசின் முதலீடுகள் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

PM - DevINE போன்ற பிரத்யேக நிதியகங்களின் வாயிலாக வடகிழக்கில் உள்ள 8 மாநிலங்களிலும் கட்டமைப்பு வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டு, அனைத்து பருவநிலைகளையும் எதிர்க்கொள்ளத்தக்க நெடுஞ்சாலைகள், பாலங்கள், ரயில் பாதைகள் மற்றும் விமான நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

*அசாமில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு. நரேந்திரமோடி, வடகிழக்கு மாநிலங்கள் தற்போது நாட்டின் முக்கியப் பொருளாதார மண்டலமாக உருவெடுத்திருப்பதாக கூறியுள்ளார்.*

*மத்திய அரசின் இந்த ஒட்டுமொத்த அணுகுமுறை வடகிழக்கு மாநிலங்களை நாட்டின் பொருளாதார வளர்ச்சி இயந்திரமாக மாற்றியுள்ளது என்று பல்வேறு நிபுணர்களும் கருத்து தெரிவித்துள்ளன.*

<><><><><><><>

ஜம்மு-காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற லசஷ்கரே தொய்பா அமைப்பைச் சேர்ந்த நான்கு தீவிரவாதிகள் கன்னிவெடியில் சிக்கி உயிரிழந்தனர்.

பூஞ்ச் மாவட்டத்தையொட்டிய எல்லைக்கட்டுப்பாடு கோடு பகுதி வழியாக ஊடுருவ முயன்ற போது இந்த தீவிரவாதிகள் கன்னிவெடியில் சிக்கியதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நான்கு பேரின் அடையாளம் கண்டறியப்பட்டிருப்பதாகவும், இவர்களில் Mohammad Faizan லசஷ்கரே தொய்பா அமைப்பின் முக்கிய நிர்வாகி என தெரிய வந்துள்ளதாகவும் பாதுகாப்புப் படையினர் கூறியுள்ளனர்.

<><><><><><><>

நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக வெளிநாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மலையேற்ற வீரர்கள் சிக்கியுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

நேபாளத்தின் கூர்கா மாவட்டத்தில் இன்று அதிகாலை ஏற்பட்ட நிலச்சரிவை தொடர்ந்து Budhi Gandaki ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதில் பல்வேறு பகுதிகளிலும் சிக்கித்தவித்த 12 வெளிநாட்டினர் உட்பட 321 பேர் மீட்கப்பட்டிருப்பதாக கூறியுள்ள நேபாள ராணுவம், மீட்புப்பணிகள் நாளையும் தொடரும் என்று அறிவித்துள்ளது.

<><><><><><><>

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்க்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை கம்போடிய பிரதமர் திரு. Hun Manet வலியுறுத்தியுள்ளார்.

அந்நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மை தினத்தையொட்டி, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

சுற்றுச்சூழல் சீர்கேடு, சமூக மற்றும் பொருளாதார மாற்றங்கள் பேரிடர்களுக்கு வழிவகுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பருவநிலை மாற்றம், நகரமயமாதல் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடு போன்றவை சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்றும் கம்போடிய பிரதமர் திரு. Hun Manet தெரிவித்துள்ளார்.

<><><><><><><>

பஞ்சாப், ஹரியானா, சண்டீகர் மற்றும் தில்லியில் இன்று சூறைக்காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திரப்பிரதேசம், ராஜஸ்தான், ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கிலும் நாளைவரை இதேநிலை காணக்கூடுமென அந்த மையம் கூறியுள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள் இமாச்சலப்பிரதேசம், கேரளா, தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒருசில இடங்களில் இன்று பலத்த காற்று வீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><>

சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் திக் விஜய் பிரதாப் சிங், கார்த்திக் பிரணவ், அர்ஜுன் ரதி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் திக்விஜய் பிரதாப் சிங், 6-1, 6-4 என்ற செட்கணக்கில், நிதின்குமார் சின்ஹாவையையும்,

பிரணவ் கார்த்திக் 6-2, 6-2 என்ற செட்கணக்கில் Anup Bangargi-யையும், அர்ஜுன் ரதி 6-2, 6-2 என்ற செட்கணக்கில் ஹிதேஷ் சவுகானையும் வென்றனர்.

**<><><><><><><>**